மாவட்ட நீதிமன்றம் எண்.2, காஞ்சிபுரம்

முன்னிலை= திரு. ப.உ.செம்மல், எம்.ஏ., எல்.எல்.எம்.,

மாவட்ட நீதிபதி எண்.2,

மாவட்ட நீதிமன்றம் எண்.2, காஞ்சிபுரம்

2023ம் ஆண்டு ஜுலை திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண். 201/2021

டி. பிரேமாவதி ..வாதி

எதிர்

1. எ. கன்னியப்பன்
2. எ. முனியன்
3. எ. இளங்கோவன்
4. எ. முனியம்மாள்
5. ஆர். ஜெயலஷ்மி .. பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 17.07.2023 ஆகிய இன்று இறுதியாக விசாரணைக்கு வந்து வாதி தரப்பில் வழக்குரைஞர்கள் கே. ஜெயசீலன், பி. சங்கர் மற்றும் எம். புருஷோத்தமன் ஆகியோர் ஆஜராகியும் பிரதிவாதிகள் தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டும் பிரதிவாதிநீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்களை தோன்றா தரப்பினராக்கியும் வாதி தரப்பு வாதம் மற்றும் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

இவ்வழக்கு, பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.15,40,497/=ஐ வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தப்படும் வரையில் ஆண்டொன்றுக்கு 24% வட்டி சேர்த்து செலவுத்தொகையுடன் அளிக்கக்கோரி முதல் நிலை தீர்ப்பாணைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு

பிரதிவாதிகள் அனைவரும் 06.08.2012 அன்று கூட்டாக தங்களது குடும்ப தேவைக்காக ரூ.4,98,000/= ஐ வாதியிடம் கடனாக பெற்று ஆண்டொன்றுக்கு 24% வட்டி சேர்த்து கொடுப்பதாக பதிவாகிய அடமான கடன் பத்திரத்தை எழுதி அளித்தார்கள். அதன் பிறகு

பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதுபோன்று அடமான கடன் தொகையையோ அல்லது உரிய வட்டியையோ செலுத்தி அடமான கடனை தீர்த்துக்கொள்ளவில்லை. பிரதிவாதிகளுக்கு ரூ.5 லட்சத்திற்கு மேல் மதிப்புடைய சொத்துக்கள் உள்ளது. தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் பலன் பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல. 06.12.2019 அன்று வாதி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் உரிய பதிலையோ பணத்தையோ திருப்பிச் செலுத்தவில்லை. எனவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்குரையில் கோரியுள்ளவாறு செலவுத் தொகையுடன் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பு வழங்கவேண்டும்.

3. இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக உள்ளனர்.

4. இவ்வழக்கில்வாதி கோரியுள்ளவாறு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவேண்டுமா என்பதே இவ்வழக்கில் தீர்வுக்குரிய அம்சமாக அமைந்துள்ளது.

5. இவ்வழக்கில் வாதியின் தரப்பில் வாதி பிரேமாவதி வாசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வேறு சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. வா.சா.ஆ.1 என்பது 06.08.2012 தேதியிட்ட வாதி பெயருக்கு பிரதிவாதிகள் வழக்குசொத்தை பொறுத்து எழுதி அளித்த பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பததிரமாக உள்ளது. வாசா.ஆ.2 என்பது 06.12.2019 அன்று இவ்வழக்கு பிரதிவாதிகள் அடமான கடன் தொகையை செலுத்தக்கேட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலாக உள்ளது. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ஆகியவை 1 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பான வா.சா.ஆ.2 ஐ பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டைகளாக உள்ளது. வா.சா.1ன் சாட்சியத்திலிருந்தும் வா.சா.ஆ.1 ஆகிய அடமான கடன் பத்திரத்திலிருந்தும் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 வழக்கறிஞா அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் அளிக்காமல் உள்ள நிலையில் பிரதிவாதிகள் வா.சா.1ன் சாட்சியத்தை மறுதலிப்பு செய்யம் வண்ணம் சாட்சியம் அளிக்காமல் உள்ள நிலையில் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக உள்ள நிலையில் பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர் அனுமானத்திற்கு வரமுடிகின்ற நிலையில், வாதி வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தை மெய்ப்பித்துள்ளார் என்று தீர்மானித்து வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தின் அடிப்படையில் வாதி வழக்கில் கோரியுள்ள வழக்கு கோருரிமை மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் வாதிக்கு அவர் வழக்கில் கோரியுள்ள தொகை

நியாயமான வட்டி விகிதத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது என்று கண்டுணர்ந்து அவ்வாறே இவ்வழக்கில் தீர்வு காணப்படுகிறது.

7. மேற்கூறியவாறான பின்னணியில் இவ்வழக்கை பரிசீலனை செய்து பார்க்கின்றபோது வாதிக்கு பிரதிவாதி வழக்கு கோருரிமை தொகையான ரூ.15,40,697/= ஐயும் அதில் அசல் தொகை ரூ.4,98,500/= க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரையில் ஆண்டு ஒன்று 9% வட்டியும் அதன்பிறகு தொகை முழுவதும் செலுத்தப்படும் வரையில் ஆண்டொன்றுக்கு 6% பின்வட்டியும் சேர்த்து அளிக்க வேண்டும் என முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பு வழங்குவதே சரியான முடிவாக இருக்கும் என தீர்மானித்து அவ்வாறே இப்பிரச்சனைக்கு விடை காணப்படுகிறது.

8. இறுதியில், வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் ரூ.15,40,697/= ஐயும் அதில் அசல் தொகை ரூ.4,98,500/= க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரையில் ஆண்டு ஒன்றுக்கு 9% வட்டியும் அதன்பிறகு தொகை முழுவதும் செலுத்தப்படும் வரையில் ஆண்டு ஒன்றுக்கு 6% பின்வட்டியும் சேர்த்து அளிக்க வேண்டும் என வாதி வழக்கில் கோரியுள்ளவாறு செலவுத் தொகையுடன் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து அவ்வாறே தீர்ப்பு வழங்கப்படுகிறது. தொகை செலுத்த பிரதிவாதிகட்கு 2 மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இத்தீர்ப்பானது சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் வடித்துக்கொள்ளப்பட்டு பின்னர் கணிணியில் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்./ப.உ.செம்மல்
மாவட்ட நீதிபதி
மாவட்ட நீதிமன்றம் எண்.2
காஞ்சிபுரம்

வாதி தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.08.2012 | வாதிக்கு பிரதிவாதிகள் எழுதி அளித்த பதிவு செய்யப்பட்ட ஈடுகாட்டிய அடமானகடன் பத்திரம் |
| வா.சா.ஆ.2 | 06.12.2019 | வாதி , பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.,3 | .. | முதல் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.4 | .. | 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.5 | .. | 4ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.6 | .. | வாதியின் ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ.7 | .. | 3ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 திருமதி. பிரேமாவதி

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்—</u> இல்லை.

ஓம்./ப.உ.செம்மல்
மா.நீ.
மா.நீ. எண்.2, காஞ்சிபுரம்.

வரைவு/சீரான தீர்ப்புரை

அ.வ. எண். 101/2021

மாவட்ட நீதிமன்றம் எண்.2

காஞ்சிபுரம்

நாள்= 18.07.2023.